# சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்

டாக்டர் ந. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

டிப். மானிடவியல், டிப். அரசியல்-ஆட்சியியல்,

தமிழ்த்துறைப் பேராசிரியர் - தலைவர்,

சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழகம்

திருவள்ளுவராண்டு - 2004

1973

# சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்

டாக்டர் ந. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

டிப். மானிடவியல், டிப். அரசியல்-ஆட்சியியல்,

தமிழ்த்துறைப் பேராசிரியர் - தலைவர்,

சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழகம்

திருவள்ளுவராண்டு - 2004

1973

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்த்துறை வெளியீடு—27

முதற் பதிப்பு—1973

© சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ. 25.00

இரத்தினம் அச்சகம், சென்னை–1.

# RESEARCH TABLES ON SANGAM LITERATURE

Dr. N. SANJEEVI M.A., M.Litt., Ph.D., Dip in Anth., & Pol., & Pub. Adm.,
Professor & Head of the Department of Tamil,
University of Madras.

UNIVERSITY OF MADRAS
1973

# சங்கத் தமிழின் சால்பு

—' மூத்தோர்கள்
பாடியருள் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும்'

—தமிழ்விடுதூது, 55—56.

★

'பத்துப்பாட் டாதிமனம்
பற்றினர் பற்றுவரோ—
எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே!'

தமிழ்த்தெய்வ வணக்கம் 31–32,
மனோன்மணீயம்,
—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

★

'பண்டை இயற்கை வளங்கள் எல்லாம்—பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் புகழும் அருந்தமிழ்
வாசம் நுகர்ந்து மகிழ்வோமே!

'கற்றவர் மெச்சும் கலித்தொகையாம்—இன்பக்
கற்பனை சேரும் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே—காதல்
மூழ்குந் துறைகண்டு வாழ்வோமே!'

மலரும் மாலையும், 56, 55
—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

★

'தூய்ய தான சங்கம் என்னும்
தொட்டிலில் வளர்ந்த பிள்ளை!'

(இசையமுது 1970, பக். 46)

'தண்டை குலுங்க ஓடிவா!—என்
சங்கத் தமிழே ஓடிவா!'

(குடும்ப விளக்கு 1966, பக். 170)

'தவழ்ந்தது சங்கத் தமிழ்ச் சுவை; அள்ளி
விழுங்கினர் பிள்ளைகள், வேளை ஆயிற்றே!'

(குடும்ப விளக்கு 1966, பக். 8)

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

★

தனித்தமிழ் இயக்கத் தந்தையார்

சங்க இலக்கிய ஆராய்ச்சிச் சான்றோர்

கல்விக்கடல்

**மறைமலையடிகளார்**

மலரடிகட்கு

★

★

'பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார்'

—டாக்டர் கலைஞர் மு கருணாநிதி,

('கவியரங்கில் கலைஞர்'

—பக்கம் 182)

★

# பத்துப்பாட்டுப் பொன்மொழிகள்

'ஒருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி' —திருமுருகாற்றுப்படை 294-295

'நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை' —பொருநராற்றுப்படை 81-82

..........................................................

'அறிவுமடம் படுதலும் அறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்' —சிறுபாணாற்றுப்படை 216-217

'நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியம்' —பெரும்பாணாற்றுப்படை 55-56

'உடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்சர்' —முல்லைப்பாட்டு 65-66

'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூ றவையம்' —மதுரைக்காஞ்சி 489-492

'நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டுத்
தேஎம் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து' —நெடுநல்வாடை 76-78

'இகல்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல' —குறிஞ்சிப்பாட்டு 27-28

'நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை' —பட்டினப்பாலை 206-212

'நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நன்னிதின் இயக்குமவன் சுற்றத் தொழுக்கம்' —மலைபடுகடாம் 77-80

(இப்பொன்மொழிகள் பழந்தமிழர் பல்துறைப் புகழை விளக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டவை - ந.சு.)

# நன்றியுரை

'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்' என் நெடுநாளைய அவா. சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியனாய்ச் சேர்ந்தபோதும் புதுப்புதுத் துறைகளில் மாணவனாய்ப் புகுந்தேன். சிறப்பாக மானிடவியலும் அரசியல் - ஆட்சியியல் கலைகளும் கற்றேன். கல்விப் பெருங்கோயிலாய் விளங்கும் இப் பல்கலைக்கழகத்தின் நூலகமும் சொற்பொழிவு அரங்கங்களும் பழந்தமிழைப் புதிய கண்கொண்டு பார்த்தலே இன்றைய இன்றியமையாத் தேவை-கடமை-என்பதை எனக்கு நாளும் உணர்த்தி வந்தன. இதன் பயனாகச் சங்க இலக்கிய வைரத்தை ஆராய்ச்சி அட்டவணைகள் என்னும் பட்டை தீட்டிப் பார்க்க அவாவினேன். ஒரு சிறு விளைவே இந் நூல்.

இப் புதுவகை முதல்நூல் உருவாகத் துணைபுரிந்த சங்க இலக்கியப் பதிப்புகள் - ஆராய்ச்சி நூல்கள் அனைத்தின் ஆசிரியர்கட்கும் என் நன்றி கலந்த வணக்கங்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பாகப் பழந்தமிழ் - சங்கத் தமிழ் நூலுணர்வை டாக்டர் உ. வே சாமிநாத ஐயர் அவர்கட்கு உண்டுபண்ணிய சேலம் இராமசாமி முதலியார் அவர்களையும் [பார்க்க - ந. சஞ்சீவி: இருபெருந் தலைவர் (1958)] சங்க இலக்கிய - கலித்தொகையின் முதற் பதிப்பாசிரியர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களையும் (சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டதாரி) இதுபோது நன்றியுடன் நினைவுகூர்ந்து வணங்கல் நம் இன்றியமையாக் கடமையாகும்.

சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள் வெறும் ஆராய்ச்சி அட்டவணைகள்-அறிவிப்பு அட்டவணைகள்-அல்ல. ஆராய்ச்சிப் பண்பால் பிறந்து ஆராய்ச்சிப் பயனால் சிறந்து விளங்க விழைவன. இவ் வுண்மையை ஒவ்வோர் அட்டவணையின் அடியில் உள்ள ஆராய்ச்சிக் குறிப்புகளும் அறிவிக்கும்.

எவ்வளவு வகை தொகை செய்யப்பட்டதாயினும் வெறும் உண்மைகள் அல்லது செய்திகள் என்ற நிலையில் நிற்கும்போது அது முழு ஆராய்ச்சி ஆகாது. உண்மைகள் அல்லது செய்திகள் பற்றிய உயர் விளக்கங்களே உயர் ஆராய்ச்சி ஆகும்.

ஆராய்ச்சி அட்டவணைகள் பார்ப்பதற்கும் பயன்படுத்தற்கும் எளியன; இனியன. ஆனால் ஆக்குதற்கும் அளித்தற்கும் அரியன. செய்முறைப் பட்டறிவே இவ்வுண்மையை மெய்ப்பிக்கும். சிறப்பாக இத்தகு ஆராய்ச்சி அட்டவணைகளை அமைப்பதற்கும் அச்சிடுதற்கும் கொள்ளும் காலம் கொள்ளை.

சங்க இலக்கியம்பற்றி ஓர் ஆயத்த அறிவிப்பு ஏடாக (Ready - reference Book) இந் நூல் சிறந்த முறையில் உருவாகப் பெருந்துணை புரிந்த பெருமாட்டி என் மதிப்பிற்குரிய வாழ்க்கைத் துணைவியார் வட சென்னை மகளிர் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை திருமதி. கிருஷ்ணா சஞ்சீவி, எம்.ஏ., எல்.டி. அவர்கள். நாங்களிருவரும் பாடுபட்டு உருவாக்கிய இந் நூலில் செப்பங்கள் செய்துத விய புலவர்கள் திரு. மு. சண்முகம் பிள்ளை, திரு. ஆனை. நரசிங்கப்பெருமாள் ஆகியோருக்கும், திரு. அ. நாகலிங்கம், எம். ஏ., திரு. வ. ஜெயதேவன், எம். ஏ., சான்றிதழ்-மொழியியல், அவர்கட்கும் சுருக்கெழுத்தர் திரு. மா. பத்மநாபன் அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி என்றும் உரியது.

இந் நூலை அச்சிடுவதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பரிவுரை புரிந்த என் ஆசிரியப் பெருந்தகையும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியரும் இந்நாள் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் ஆகிய என் அறிவுத்தந்தை பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கட்கு எழுமையும் நன்றியுடையேன்.

இந் நூல் அச்சாவதில் கண்ணுங்கருத்துமாய் இருந்த கல்விநெறிக் காவலர் – சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் – தாமரைச் செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்களுக்கு யான் எவ்வாறு நன்றிசெலுத்த வல்லேன்? சங்க இலக்கியச் 'சான்றோர் சென்ற நெறி'யில் செல்லும் அச் செல்லாச் செல்வரை 'வணங்குதல் அன்றி வாழ்த்தல் என் நாவிற்கு அடங்காது!'

இப்புதுவகை முதல்நூல் நன்முறையில் அச்சாக என்னுடன் பொறுமையுடன் ஒத்துழைத்த இரத்தினம் அச்சகத்தார்க்கு என் உளங்கனிந்த பாராட்டு என்றும் உரியது.

சங்கப்பாடல்களைப் படிக்கும்போதெல்லாம் இந்த ஆராய்ச்சி அட்டவணைகள் நூலையும் உடன் வைத்துப் பார்த்துக் குற்றங் குறைகளைக் குறித்து அனுப்பல் நற்றம் நிறைய நல்வழி ஆகும்.

அவ்வகையில் இந் நூல் இன்னும் ஏற்றம் பெற ஏற்பன கூறுவார்க்கு என்ஞான்றும் நன்றியுடையேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பணி ஒன்றையே வாழ்நாட் பணியாகக் கொண்டிருக்கும் என் முயற்சிகள் சிறந்தோங்கத் தமிழ்த்தாய் தண்ணருள் புரிவாளாக!

ந. சஞ்சீவி

14—1—'73
தமிழர் திருநாள்

# எட்டுத்தொகைப் பொன்மொழிகள்

'முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்' —நற்றிணை 355: 6-7

'வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவர் உயிர்' —குறுந்தொகை 135: 1-2

'நன்றுபெரிது சிறக்க தீதில் லாகுக' —ஐங்குறுநூறு 9: 2

'சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்று
ஐந்துடன் போற்றி யவைதுணை யாக
எவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி' —பதிற்றுப்பத்து 21: 1:4

'யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல, நின்பால்
அருளு மன்பு மறனு மூன்றும்' —பரிபாடல் 5: 78-80

'செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர' —கலித்தொகை 68: 3-5

'யாக்கைக்கு
உயிர்இயைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்த லன்ன காதல்
சாத லன்ன பிரிவரி யோளே' —அகநானூறு 339: 11-14

'உண்டா லம்ம இவ்வுலகம்.........
.............................................
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே' —புறநானூறு 182: 1, 8-9

(இப்பொன்மொழிகள் பழந்தமிழர் பல்துறைப் புகழை விளக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டவை- ந.ச.)

# அட்டவணைப் பொருளடக்கம்

## I


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்) | ... 1 |
| 2. | பத்துப்பாட்டு | ... 2 |
| 3. | பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பற்றிய பழம்பாடல்கள் | ... 4 |
| 4. | பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களும் அவற்றைப் பாடிய புலவர் எண்தொகை விளக்கமும் | ... 5 |
| 5. | எட்டுத்தொகை நூல்களும் பாடல் எண்ணிக்கையும் | ... 6 |
| 6. | எட்டுத்தொகை நூல்களின் அடிவரையறை | ... 8 |
| 7. | எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்தாரும் தொகுப்பித்தாரும் | ... 9 |
| 8. | எட்டுத்தொகை நூல்களுள் இலங்கும் பாகுபாடுகள் | ... 10 |


## II


| | | |
|---|---|---|
| 1. | சங்கப் புலவர் அகரவரிசை | ... 12 |
| 2. | சங்கப் புலவர் பெயர் வேறுபாட்டு விளக்கம் | ... 19 |


## III


| | | |
|---|---|---|
| புலவர் பெயர் வகை | | ... 21 |
| 1. | உறுப்பால் பெயர் பெற்றவர் | ... 22 |
| 2. | ஊராற் பெயர் பெற்றவர் | ... 23 |
| 3. | ஊரொடு தொடர்ந்த பெயர் கொண்ட புலவர் | ... 27 |
| 4. | கோத்திரத்தாற் பெயர் பெற்றவர் | ... 28 |
| 5. | சமயத்தாற் பெயர் பெற்றவர் | ... 28 |
| 6. | தெய்வத்தாற் பெயர் பெற்றவர் | ... 29 |
| 7. | தொடராற் பெயர் பெற்றவர் | ... 30 |
| 8. | தொழில் முதலியவற்றாற் பெயர் பெற்றவர் | ... 31 |
| 9. | நாளாற் பெயர் பெற்றவர் | ... 31 |
| 10. | பாடல் பொருள் முதலியவற்றால் பெயர் பெற்றவர் | ... 31 |
| 11. | பெற்றாரொடு தொடர்ந்த பெயர் கொண்ட புலவர் | ... 32 |
| 12. | மரபாற் பெயர் பெற்றவர் | ... 32 |
| 13. | வழக்கவொழுக்கத்தாற் பெயர் பெற்ற புலவர் | ... 32 |
| 14. | பெண்பாற் புலவர் | ... 33 |
| 15. | அரசர் | ... 34 |
| 16. | இளம் என்னும் அடைபெற்ற புலவர்கள் | ... 34 |
| 17. | பெரு என்னும் அடைபெற்றார் | ... 35 |
| 18. | குறு என்ற அடைபெற்றோர் | ... 35 |
| 19. | நெடு என்ற அடை பெற்றோர் | ... 35 |
| 20. | பாடிய என்ற சிறப்புப் பெற்றோர் | ... 35 |
| 21. | கிழார் புலவர்கள் | ... 36 |
| 22. | தந்தையும் மகனும் புலவராயிருந்தோர் | ... 36 |
| 23. | உடன்பிறப்புப் புலவர்கள் | ... 36 |
| 24. | துஞ்சிய புலவர்கள் | ... 36 |
| 25. | ஆசிரியன் - ஆசிரியர் | ... 36 |
| 26. | தொண்டைநாட்டுப் புலவர்கள் | |

பக்கம்

27. சேரநாட்டுப் புலவர்கள் ... 36
28. சோழநாட்டுப் புலவர்கள் ... 37
29. பாண்டியநாட்டுப் புலவர்கள் ... 37
30. அழிசி ... 38
31. ஆதனார் ... 38
32. ஆந்தை ... 38
33. எயின் ... 39
34. கடுவன் ... 39
35. கண்ணன் ... 39
36. கந்தரத்தன் ... 39
37. கந்தன் ... 39
38. காவிதி ... 39
39. கீரன் ... 39
40. குமரன் ... 40
41. குடி ... 40
42. குட்டுவன் என்று பெயர் பெற்றார் ... 40
43. கூத்தன் ... 40
44. கொற்றன் ... 40
45. கொல்லன் ... 40
46. கோவன் ... 41
47. கௌசிகன் ... 41
48. சாத்தன் ... 41
49. சேந்தன் ... 41
50. தத்தன் ... 41
51. தமிழ் - தமிழக்கூத்தன் ... 41
52. தேவன் ... 41
53. நப்பசலை ... 41
54. நாகன் ... 41
55. நெய்தல் ... 42
56. பதுமன் ... 42
57. புலவன் ... 42
58. புல்லன் ... 42
59. பூதன் ... 42
60. போத்தன் ... 42
61. மருதம் ... 42
62. மருதன் ... 42
63. மள்ளன் ... 42
64. மாறன் ... 42
65. மோசி ... 43
66. வழுதி ... 43
67. வெளியன் ... 43
68. வேட்டன் ... 43

## III—அ

புலவர் பெயரால் அறியப்படும் ஊர்ப்பெயர்கள் ... 43

பக்கம்

III—ஆ

புலவர் பெயரால் அறியப்பெறும் தெய்வப்பெயர்கள் ... 45

III—இ

புலவர் பெயரால் அறியப்பெறும் தொழில் முறை விளக்கம் ... 45

IV

சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்கள்

1. அகப்பொருள் மட்டும் பாடிய பெண்பாற் புலவர்கள் ... 46
2. புறப்பொருள் மட்டும் பாடிய பெண்பாற் புலவர்கள் ... 48
3. அகமும் புறமும் பாடிய பெண்பாற் புலவர்கள் ... 49

1. அகநானூற்றில் பாடிய பெண்பாற் புலவர்கள் ... 55
2. குறுந்தொகை பாடிய பெண்பாற் புலவர்கள் ... 55
3. நற்றிணை பாடிய பெண்பாற் புலவர்கள் ... 55
4. புறநானூறு பாடிய பெண்பாற் புலவர்கள் ... 55
5. பதிற்றுப்பத்தில் பாடிய பெண்பாற் புலவர் ... 56

IV—அ

சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்கள் அட்டவணை ... 57

V

அகப்பொருள் மட்டும் பாடிய புலவரும் அவர்தம் பாடல் பொருள் விளக்கமும் ... 60

VI

புறப்பொருள் மட்டும் பாடிய புலவரும் அவர்தம் பாடல் விளக்கமும் ... 116

VII

அகமும் புறமும் பாடிய புலவர்கள் ... 129

VIII

எட்டுத்தொகைப் புலவர்களும் பாடிய பாடல்களும் ... 211

IX

ஆசிரியர் பெயர் காணாப் பாடல்கள் ... 290

X

ஒரு நூலில்மட்டும் பாடிய புலவர்கள் ... 298

இணைப்பு - 1
அகப்பொருள் மட்டும் பாடிய புலவரும் அவர்தம் பாடல் பொருள் விளக்கமும் - ஆராய்ச்சிக் குறிப்பு நூல் காண்க ... 303

இணைப்பு - 2
புறப்பொருள் மட்டும் பாடிய புலவரும் அவர்தம் பாடல் விளக்கமும் ... 309

இணைப்பு - 3
சங்க இலக்கியப் பதிப்புகள் ... 322

இணைப்பு - 4
சங்க இலக்கிய ஆராய்ச்சி நூலடைவு ... 329

இணைப்பு - 5
Books on Sangam Literature ... 341

இணைப்பு - 6
Research Theses on Sangam Classics ... 343

ஆராய்ச்சிக் குறிப்புகள் (இணைப்பு 3.6) ... 347

ானிணைப்பு

சங்க இலக்கிய ஆராய்ச்சி நூலடைவு ... 351

ற்சேர்க்கை—1

புலவரும் புரவலரும் ... 353

ற்சேர்க்கை—2

புரவலரும் புலவரும் ... 371

சங்க கால அரசர் முதலியோர் அகர வரிசை ... 397

சங்க கால அரசர் முதலியோர் பெயர் வேறுபாட்டு விளக்கம் ... 400

புலவர் புகழ் புலவர்கள் ... 403

பிழை திருத்தம் ... 405

படிப்போர் குறிப்புகள் ... 407

# 1

# I. சங்க இலக்கியம்

## (பாட்டும் தொகையும்)

### பத்துப்பாட்டு

1. திருமுருகாற்றுப்படை
   (புலவராற்றுப்படை, முருகு)
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)

**ஆராய்ச்சிக் குறிப்பு**

1. (அ) *இவை பத்துள் முதல் நான்கும் முடிவும் ஆற்றுப்படைகள். அவற்றுள் மூன்றும் நான்கும் இருவகைப் பாணர்பற்றியன.*

   (ஆ) *எனவே பத்துப்பாட்டுள் செம்பாதி ஆற்றுப் படைகள்.*

   (இ) *இத் தொகை நூலின் முதலும் முடிவும் ஆற்றுப் படைகள். அவற்றுள் முதலாவது புலவராற்றுப்படை; முடிவானது கூத்த ராற்றுப்படை; இவ்வாறு பெயர் பெற் றிருப்பது போற்றத்தக்கது.*

2. *பத்துப்பாட்டுள் ஐந்தாவது முல்லை நிலம்; ஆறு மருத நிலம்; ஏழு பாலை ஒழுக்கம்; எட்டும் பத்தும் குறிஞ்சி நிலம்; ஒன்பது நெய்தல் நிலமும் பாலை ஒழுக்கமும். எனவே, பத்துப் பாட்டுள் ஐந்திணையும் அமைந்தன.*

3. *பத்துப்பாட்டுள் ஐந்தும் ஏழும் எட்டும் ஒன்பதும் அகம்; பிற புறம்.*

### எட்டுத்தொகை

1. நற்றிணை (நானூறு)
2. குறுந்தொகை (நானூறு)
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை (கலி, குறுங்கலித்தொகை.)
7. அகநானூறு (நெடுந்தொகை, அகம், அகப்பாட்டு.)
8. புறநானூறு (புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு.)

**ஆராய்ச்சிக் குறிப்பு**

1. (அ) *எட்டுள் முதலிரண்டும் நாற்பிரண்டும் நானூறு நானூறு பாடல்கள் உடையன.*

   (ஆ) *எட்டுத்தொகையுள் பரிபாடலும் கலித் தொகையும் நீங்க ஏனைய ஆறும் எண்ணடிப் படையில் தொகுக்கப்பெற்றுப் பெயர் பெற்றவை.*

2. *எட்டுத்தொகை நூல்கள் பெரும்பாலனவற்றின் எண்ணிக்கையை எண்ணும்போது, பத்திலும் நூறிலும் பழந்தமிழர்க்கு இருந்த பற்றுப் புலனாகும்.*

3. (அ) *பதிற்றுப்பத்தும் புறநானூறும் நீங்கலாக ஏனையவை அகப்பொருள்பற்றியன. அவ் வாறன்றும் பரிபாடல் முற்றிலும் அகப் பொருள் பற்றியதா என்பது ஆய்வுக் குரியது.*

   (ஆ) *பத்துப்பாட்டைவிட எட்டுத்தொகை யுள்ளே அகப்பொருள் நூல்கள் அதிகமா யிருப்பது அறியத்தக்கது.*

# 2. பத்துப்

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| நூலின் பெயர் | திருமுருகாற்றுப் படை | பொருநராற்றுப் படை | சிறுபாணாற்றுப் படை | பெரும்பாணாற்றுப்படை | முல்லைப் பாட்டு |
| பாடினோர் | மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் | முடத்தாமக் கண்ணியார் | இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் |
| பாடப்பட்டோர் | குமரவேள் | சோழன் கரிகாற் பெருவளத்தான் | ஓய்மா நாட்டு நல்லியக் கோடன் | தொண்டைமான் இளந்திரையன் | — |
| பாட்டினடிகள் | 317 | 248 | 269 | 500 | 103 |
| பாடிய காரணம் | — | — | — | — | — |

ஆராய்ச்சிக் குறிப்பு

1. *பத்துப்பாட்டுள் முதற்பாட்டாக இருப்பது திருமுருகாற்றுப்படை; தொகைநூல்களுள் வேறு எத்தெய்வத்திற்கும் இவ்வளவு நீண்ட பாடல் இல்லை.*
2. (அ) *பத்துப்பாட்டுள் அகப்பொருட் பாடல்கள் குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகிய நான்கும் என்பர்.*
   (ஆ) *நெடுநல்வாடை அகப்பாட்டன்று என்பது நச்சினார்க்கினியர் கருத்து.*
   (இ) *பட்டினப்பாலை பாட்டுடைத் தலைவனைப் பெற்றிருப்பினும் அகப்பாட்டருமை உடையது.*
   (ஈ) *இந் நான்கு அகப்பாட்டுள்ளும் குறிஞ்சிப்பாட்டே முழுதும் அகப்பொருள் செய்தி கொண்டது; பாடப்பட்ட காரணத்தாலும் தனிச்சிறப்பு உடையது.*
   (உ) *ஏனைய புறப்பொருள் செய்தி புகல்வன.*
   (ஊ) *எனவே, பத்துப்பாட்டுள் புறப்பொருட் பாடல்களும் அடிகளுமே அதிகம்.*
3. (அ) *பாட்டுடைத் தலைவர் இல்லா அகப்பாடல்கள் முல்லைப்பாட்டும் குறிஞ்சிப்பாட்டும். (காரணம் அவை அகப்பொருள்பற்றிய பாடல்கள். நெடுநல்வாடை என்னும் பாட்டுப் பாண்டியனைப் பாடுவதாக நச்சினார்க்கினியர் கருதுவர்.)*
   (ஆ) *இவ்விரு பாடல்களே பத்துப்பாட்டுள் 'பாட்டு' என முடிதலும் கருதத்தக்கது.*
4. *குறிஞ்சிப்பாட்டு ஒன்றுக்கு மட்டுமே, 'தமிழ் அறிவித்தற்கு' என்று பாடிய காரணம் கூறப்படுகிறது.*
5. *அடி எண்ணிக்கைப்படி ஏறுமுகமாக நூல்களின் பெயர் வருமாறு :*
   1. *நப்பூதனார்—முல்லைப்பாட்டு* (103)
   2. *நக்கீரர்—நெடுநல்வாடை* (187)
   3. *முடத்தாமக்கண்ணியார்—பொருநராற்றுப் படை* (248)
   4. *கபிலர்—குறிஞ்சிப்பாட்டு* (261)
   5. *நல்லூர் நத்தத்தனார்—சிறுபாணாற்றுப்படை* (269)
   6. *உருத்திரங்கண்ணனார்—பட்டினப்பாலை* (301)
   7. *நக்கீரர்—திருமுருகாற்றுப்படை* (317)
   8. *உருத்திரங்கண்ணனார்—பெரும்பாணாற்றுப் படை* (500)
   9. *பெருங்கௌசிகனார்—மலைபடுகடாம்* (583)
   10. *மாங்குடி மருதனார்—மதுரைக்காஞ்சி* (782)

பாட்டு

| 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|
| மதுரைக் காஞ்சி | நெடுநல்வாடை | குறிஞ்சிப்பாட்டு | பட்டினப் பாலை | மலைபடுகடாம் |
| மாங்குடி மருதனார் | மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் | கபிலர் | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் |
| தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் | தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் | — | சோழன் கரிகாற் பெருவளத்தான் | பல் குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் |
| 782 | 187 | 261 | 301 | 583 |
| — | — | ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்கு | — | — |

6. பத்துப்பாட்டுள் மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியே மிக்க அடி (782) உடையது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படை (500) பட்டினப்பாலை (301) ஆகிய இரு நூல்களின் அடிகளை ஒன்றாகக் கூட்டினாலும் அவை மதுரைக்காஞ்சியினும் 19 அடிகளே மிகுதி பெற்றுள்ளன.

7. பத்துப்பாடல்களின் இறுதியிலும் உள்ள நூற்குறிப்புகளுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு நீங்கலாக மற்ற எட்டிலும், 'இவரை இவர் பாடியது' என்றே உள்ளது.

8. (அ) பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படையையும் நெடுநல்வாடையையும் நக்கீரர் பாடியுள்ளார்.
(ஆ) பத்துப்பாட்டுள் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையும் பட்டினப்பாலையும் பாடியுள்ளார்.

9. பத்துப்பாட்டுள் பாடியோர் எண்மர் :
   1. நக்கீரர் (2 நூல்)
   2. முடத்தாமக்கண்ணியார்
   3. நல்லூர் நத்தத்தனார்
   4. கடியலூர் உருத்திரங்கண்ணனார் (2 நூல்)
   5. நப்பூதனார்
   6. மாங்குடி மருதனார்
   7. கபிலர்
   8. பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

10. பத்துப்பாட்டுள் பாடப்பட்டோர் அறுவர் :
   1. குமரவேள்
   2. சோழன் கரிகாற்பெருவளத்தான் (2 நூல்)
   3. ஓய்மாநாட்டு நல்லியக் கோடன்
   4. தொண்டைமான் இளந்திரையன்
   5. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்
   6. செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன்

இவர்களுள் ஒருவர் பாண்டியர்; ஒருவர் சோழர்; மூவர் குறுநிலவேந்தர்; சேரர் ஒருவரும் இல்லை.

11. பத்துப்பாட்டுள் நூற்பெயரிலேயே இடம்பெற்றிருக்கும் நகரங்கள் இரண்டு. ஒன்று மதுரை (இயற்பெயர்); மற்றொன்று காவிரிப்பூம் பட்டினம் (காரணப் பெயர்).

# 3. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்பற்றிய பழம்பாடல்கள்

**பத்துப்பாட்டு**

முருகு, பொருநாறு, பாணிரண்டு, முல்லை,
பெருகுவள மதுரைக் காஞ்சி,—மருவினிய
கோலநெடு நல்வாடை, கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும் பத்து.

**2. பத்துப்பாட்டும் பாடப்பட்டோரும்**

முருகாறு செவ்வேள்; பொருநாறு, பாலை
கரிகால்; நெடுஞ்செழியன் காஞ்சி;—இருபாணும்
நல்லியக் கோடன், இளந்திரையன்; நன்னன்கடாம்,
கல்வித் தலைவர் கருது.

**3. பத்துப்பாட்டும் பாடினோரும்**

முருகு, நல்வாடையும் கீரன்; முடத்தாமக் கண்ணி பொருந்;
மருவு பாண், பாலை உருத்திரங் கண்ணன்; மகிழ்சிறு பாண்
புரியுநத் தத்தன்; மருதம்நன் காஞ்சி; நப்பூதன் முல்லை;
வருமெங் கபிலன் குறிஞ்சி; மலைகடாம் கௌசிகனே!

**4. பத்துப்பாட்டையும் அதன் உரையையும் காப்பாற்றிய பெரியோன்**

முருகாறு, பொருநாறு, சிறுபாணாறு,
முல்லை,பெரும் பாணாறு, மதுரைக் காஞ்சி,
பரிதாய பொருள்தழுவா நெடுநல் வாடை,
பட்டினப்பாலை,குறிஞ்சி, மலைக டாமும்,
மருவாரும் பொழில்புடைசூழ் களந்தை மூதூர்
வருசிவப்ப பூபன்அருள் வேல பூபன்,
உரையோடும் எழுதினன்ஆ தலினால் அன்னான்
ஓங்குபெருஞ் செல்வம்,இசை யுற்று வாழி!

**ஆராய்ச்சிக் குறிப்பு**

1. *இந் நான்கு பாடல்களுள்ளும் உள்ள அடைச்சிறப்பு அறியவே தடித்த எழுத்து.*
2. *இப் பாடல்களுள் முதல் மூன்றைச் சமாச (பாரி நிலையம்) பதிப்பிலும், நான்காவதைப் பெருந்தொகைப் பதிப்பு (1935—36) பக்கம் 491 லும் காணலாம்.*

# 4. பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களும் அவற்றைப் பாடிய புலவர் எண்தொகை விளக்கமும்

| நூலின் பெயர் | பெயர் தெரிந்த புலவரின் எண்ணிக்கை | | பெயர் தெரிந்த புலவர் | பெயர் தெரியாப் புலவர் |
|---|---|---|---|---|
| எட்டுத்தொகை | இந் நூலில் பாடிய புலவர் | இந் நூலில்மட்டும் பாடிய புலவர் | பாடிய பாடல் எண்ணிக்கை | பாடிய பாடல் எண்ணிக்கை |
| 1. அகநானூறு | 158 | 56 | 397 | 3 |
| 2. ஐங்குறுநூறு | 5 | — | 500 | — |
| 3. கலித்தொகை | 5 | 1 | 150 | — |
| 4. குறுந்தொகை | 203 | 112 | 390 | 10 |
| 5. நற்றிணை | 187 | 83 | 344 | 56 |
| 6. பதிற்றுப்பத்து | (10—2)=8 | 2<br>(1) காப்பியாற்றுக் காப்பியனார். (2) குமட்டூர்க் கண்ணனார் | 80 | 6 |
| 7. பரி பாடல் | 13 | 11 | 20 | 13 |
| 8. புறநானூறு | 157 | 75 | 386 | 14 |
| பத்துப்பாட்டு | 8 | 4<br>(1) இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் [3]<br>(2) இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் [10]<br>(3) காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் [5]<br>(4) முடத்தாமக் கண்ணியார் [2] | 10 | |

# 5. எட்டுத்தொகை நூல்களும் பாடல் எண்ணிக்கையும்

(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பின்படி)

| நூலின் பெயர் | தொகை | முழுதும் கிடைப்பன | சிதைந்து கிடைப்பன | முழுதும் கிடையாதன |
|---|---|---|---|---|
| நானூறு | 401 | 401 (1* + 400) | — | — |
| குறுநூறு | 501 | 499 (1* + 500) | — | (129,130) = 2 |
| த்தொகை | 150 | 150 : — | — | — |
| றுந்தொகை | 402 | 402 (1* + 401) | — | — |
| ற்றிணை | 401 | 400 (1* + 400) | 385 | 234 |
| திற்றுப்பத்து | 86 | 86 (1* + 80 + 5†) | 5† | முதல்பத்து; பத்தாம் பத்து (1 – 10); (91 – 100) |
| ரிபாடல் | 33 | 33 (22 + 11†) | 2, 20, 22, 3† 5† | (33 – 70) = 37 |
| புறநானூறு | 400 | 398 (400) | (தொடக்க மில்லாதது:<br>328ஆம் பாடல் மட்டும்<br>இடையில் சில பகுதிகள் இல்லாதன:<br>282, 283, 285, 288, 306, 317, 321, 323, 328, 333, 334, 335, 337, 339, 340, 341, 345, 347, 352, 353, 357, 361, 366, 371, 373, 377, 380, 383, 384, 387, 388, 390, 391, 393, 395, 396, 397, 398, 399.<br>பிற்பகுதி இல்லாதன:<br>244, 355, 361.) = 43 | (267,268) = 2 |

* கடவுள் வாழ்த்து

† இரட்டு

1. எட்டுத்தொகையுள் முழுதும் கிடைக்கும் தொகை நூல்கள்:

   (அ) அகம் (ஆ) கலித்தொகை (இ) குறுந்தொகை (ஈ) நற்றிணை

2. முழுவதுமாகக் கிடைக்கும் எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகை, புறநானூறு நீங்கலாக ஏனை கடவுள் வாழ்த்தை நானூற்றுக்கும் புறம்பாகவே பெற்றுள்ளன.

3. சிதைவின் ஏறுமுக அடிப்படையில் நூல்களின் வரிசை வருமாறு:

   (அ) ஐங்குறுநூறு (ஆ) புறநானூறு (இ) பதிற்றுப்பத்து (ஈ) பரிபாடல்

4. அகநூல்கள் அதிகச் சிதைவின்றியிருத்தல் இன்பம்.

5. ஐங்குறுநூற்றிலும் புறநானூற்றிலும் இடையில் இரண்டிரண்டு பாடல்கள் தொடர்ந்தாற்போல் முழுதும் காணப்பெறுமை குறிக்கத்தக்கது.

6. பதிற்றுப்பத்தும் பரிபாடலும் முதலும் முடிவும் இன்றி இருத்தல் குறிக்கத்தக்கது.

7. பத்துப்பாட்டுள் சேரர்பற்றிய பாட்டு எதுவுமின்மையும் முழுச்சேரர் இலக்கியமாகிய பதிற்றுப்பத்து முதலும் முடிவும் இழந்திருப்பதும் எண்ணத்தக்கன.

8. பதிற்றுப்பத்துப் பாடல்களின் மற்றொரு தனிச்சிறப்பு துறையும் வண்ணமும் தூக்கும் பெயரும் பெற்றிருப்பதே ஆகும்.

9. பதிற்றுப்பத்து முழுச்சேரர் மரபு இலக்கியம் என்னும் தனிச்சிறப்பினது. ஒரு சேரர்க்கு இவ்வளவு (10) என்னும் வரையறை அமைந்த ஒரே சங்க நூல் பதிற்றுப்பத்து.

10. பரிபாடல் பாடல்கள் யாவும் மதுரையைச் சார்ந்தன.

11. பரிபாடல் தொகையின் தனிச்சிறப்பு, பாவியற்றியோர் பெயர்களோடு அப் பாக்களுக்கு இசையமைத்தோரின் பெயரும் இருத்தலே ஆகும்.

12. 22 பாக்களே உள்ள பரிபாடலும் 150 பாடல்களே உள்ள கலித்தொகையும் முறையே பரிபாட்டு, கலிப்பாட்டு என்னும் பாவகையால் ஆக்கப்பட்டவை. (இத்தகைய பாவகையால் இயற்றப்பெற்ற நூல்கள் இப்போது தமிழில் இவையே.)

13. பரிபாடல், கலித்தொகை நீங்க ஏனையவை அகவற்பாக்கள்.

14. ஏனைய எட்டுத்தொகை நூல்கள் எண்ணால் பெயர்பெற்றிருக்கக் கலித்தொகை, பரிபாடல் என்னும் இரண்டின் பெயரிலும் எண் இடம் பெறாதது எண்ணத்தக்கது.

15. கலித்தொகையில் முல்லைக்கலி புதுமையானது. ஏறுதழுவுதல் (அசுரம்) கைக்கிளைக்கண் அடங்கும் என உரையாசிரியர் கருதுவர். ஆனால், ஏறுதழுவலை உணர்த்தும் முல்லைக்கலி, ஐந்திணை இலக்கியமாய் இத் தொகையுள் இலங்குவது கருதத்தக்கது.

16. மிகக் குறைந்த அடிகளையுடைய ஐங்குறுநூறானது குறுந்தொகை என்று பெயர் பெறாத பான்மையும்—அகநானூற்றைக்காட்டிலும் அடிவரையறை நிறையப்பெற்றுள்ள கலித்தொகையும் பரிபாடலும், நெடுந்தொகை என்னும் பெயர் பெறாது, பாவகையால் பெயர் பெற்றிருக்கும் பான்மையும்—நோக்கத் தக்கன.

17. அடிவகையில் குறுந்தொகையும் நெடுந்தொகையும் மாறு. பொருள் வகையில் அகநானூறும் புறநானூறும் மாறு.

18. குறுந்தொகையினும் குறைந்த அடிகளையுடைய வேறுவேறான ஐந்து புலவர்களால் பதிற்றுப்பத்தாகப் (பப்பத்தாக) பாடப்பட்ட ஐந்நூறு பாடல்களைக் கொண்டதுமாகிய நூல் 'ஐங்குறுநூறு' எனப் பெயர் பெற்ற அழகு அறியத்தக்கது.

19. குறுந்தொகை, நெடுந்தொகை காரணப்பெயர்கள்.

20. (அ) குறுகலும் பெருகலும் இன்றி அமைந்திருக்கும் பாடல்கள் நற்றிணை என அமைக்கப்பட்டுள்ளன. அடிவரையறையிலும் நடுநிலையே நல்ல நிலைபோலும்.!

    (ஆ) நற்றிணை 234ஆம் பாடல் இறையனாரகப்பொருள் 28ஆம் நூற்பா உரை மேற்கோள் செய்யுளோ, அன்றித் தொல்காப்பியப் பொருளதிகாரக் களவியல் 23ஆம் நூற்பாவின் நச்சினார்க்கினியர் உரை மேற்கோளோ என ஐயுறுவர்.

21. எட்டுத்தொகையுள் பதிற்றுப்பத்திலும் புறநானூற்றிலும் பாடப்பட்டோர் காணப்பெறுவர். புறநானூற்றில் பாடப்பட்டோர் மூவேந்தரும் வள்ளல் எழுவரும் குறுநிலத்தலைவர் பலரும் ஆவர். பதிற்றுப்பத்தில் சேரர்மட்டுமே.

# 6. எட்டுத்தொகை நூல்களின் அடி வரையறை

| நூலின் பெயர் | சிற்றெல்லை | பேரெல்லை | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| அகநானூறு | 13 | 31 | 18 | IV |
| ஐங்குறுநூறு | 3 | 5 | 2 | I |
| 3. கலித்தொகை | 11 (பாலை) | 80 (முல்லை) | 69 | VII |
| 4. குறுந்தொகை | 4 | 8 | 4 | III |
| 5. நற்றிணை | 9 | 12 | 3 | II |
| 6. பதிற்றுப்பத்து | 8 (47, 56ஆம் பாடல்) | 57 (90ஆம் பாடல்) | 49 | VI |
| 7. பரிபாடல் | 32 (செவ்வேள்பற்றிய ஒரு பாடல்) | 140 (வையைபற்றிய ஒரு பாடல்) | 108 | VIII |
| 8. புறநானூறு | 4 | 40 | 36 | V |

**ஆராய்ச்சிக் குறிப்பு**

1. *அடிவரையறை அடிப்படையில் ஐங்குறுநூற்றை அடுத்துக் குறுந்தொகையும், அதை அடுத்து நற்றிணையும், அதை அடுத்து அகநானூறும் அமைவது காண்க.*

2. *கலித்தொகையில் குறைந்த அடிகளையுடைய பாட்டு அந் நூலில் மிகுதியான பாடல்களைப் பெற்றுள்ள பாலைப்பகுதியையும், மிக்க அடிகளையுடைய பாட்டு குறைந்த பாடல்களைப் பெற்றுள்ள முல்லைப் பகுதியையும் சார்ந்ததாதல் கருதத்தக்கது.*

3. *சிற்றெல்லை—பேரெல்லை அடிகள் கணக்கீட்டில் ஐங்குறுநூறே குறைந்த (2 அடி) வேறுபாடு உடையது. பரிபாடலே மிகுந்த (108 அடிகள்) வேறுபாடுடையது. அடி எண்ணிக்கை வேறுபாட்டு வகையில் ஏறுமுகமாக எட்டுத்தொகை நூல்களின் வரிசை வருமாறு:*

| | | | |
|---|---|---|---|
| i. *ஐங்குறுநூறு* | ii. *நற்றிணை* | iii. *குறுந்தொகை* | iv. *அகநானூறு* |
| v. *புறநானூறு* | vi. *பதிற்றுப்பத்து* | vii. *கலித்தொகை* | viii. *பரிபாடல்.* |

# 7. எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்தாரும் தொகுப்பித்தாரும்

| நூல் | தொகுத்தார் | தொகுப்பித்தார் |
|---|---|---|
| 1. அகநானூறு | மதுரை உப்பூரிகுடிகிழான் மகனுவான் உருத்திர சன்மன் | பாண்டியன் உக்கிரப் பெருவழுதி |
| 2. ஐங்குறுநூறு | புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் | யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையார் |
| 3. கலித்தொகை | நல்லந்துவனார் | தெரியவில்லை |
| 4. குறுந்தொகை | பூரிக்கோ | தெரியவில்லை |
| 5. நற்றிணை | தெரியவில்லை | பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி |
| 6. பதிற்றுப்பத்து | ,, | தெரியவில்லை |
| 7. பரிபாடல் | ,, | ,, |
| 8. புறநானூறு | ,, | ,, |

ஆராய்ச்சிக் குறிப்பு

1. இப் பட்டியலால் பழந்தமிழரசர் தமிழ் காக்கும் பணியில் தலைசிறந்திருந்தமை தெளிவாகப் புலனாகும்; தொகுப்பித்தார் அனைவரும் தமிழ்க் காவலர்; தமிழகக் காவலர்.

2. தொகுத்தார் புலவராயும் தொகுப்பித்தார் புரவலராயும் இருத்தல் கருதற்குரியது.

3. எட்டுத்தொகையுள் நான்கனுக்குத் தொகுத்தார் தெரியவில்லை; ஐந்தனுக்குத் தொகுப்பித்தார் தெரியவில்லை.

4. தொகுப்பித்தாருள் இருவர் பாண்டியர்; ஒருவர் சேரர்.

# 8. எட்டுத்தொகை நூல்களுள் இலங்கும் பாகுபாடுகள்

## I. அகநானூற்றின் பாகுபாடு

**(அ) அகநானூற்றின் மூவகைப் பாகுபாடு**

களிற்றியானை நிரை .................. 1—120
மணிமிடை பவளம் .................. 121—320
நித்திலக் கோவை .................. 321—420

**(ஆ) அகநானூற்றில் ஐந்திணைப் பாகுபாடும் பாட்டெண்ணும்**

பாலை ........................ 1, 3, 5, 7, 9
முல்லை ........................ 4
மருதம் ........................ 6
நெய்தல் ........................ 10
குறிஞ்சி ........................ 2, 8

## II. தொகை நூல்களின் அமைப்பு முறையை விளக்கும் சில பழம் பாடல்கள்

**1. அகநானூற்றில் பாட்டு வைப்புமுறையும் திணைப் பாகுபாடும்**

அ. வியமெல்லாம் வெண்டேர் இயக்கம்; கயமலர்ந்த
தாமரையா றுகத் தகைபெறீஇக் காமர்
நறுமுல்லை நான்காக நாட்டி, வெறிமாண்ட
எட்டும் இரண்டும் குறிஞ்சியாக் குட்டத்து
இவர்திரை பத்தா, இயற்பட யாத்தான்
தொகையில் நெடியதனைத் தோலாச் செவியான்
வகையின் நெடியதனை வைப்பு.

ஆ. ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை; ஓதாது
நின்றவற்றில் நான்கு நெறிமுல்லை; அன்றியே
ஆறும் மருதம்; அணிநெய்தல் ஐயிரண்டு
கூறுதவை குறிஞ்சிக் கூற்று.

இ. பாலைவியம் எல்லாம்; பத்தாம் பனிநெய்தல்
நாலு நளிமுல்லை; நாடுங்கால், மேலையோர்
தேரும் இரண்டெட்டு, இவை குறிஞ்சி; செந்தமிழின்
ஆறு மருதம் அகம்.

**2. ஐங்குறுநூறும் அவற்றின் ஆசிரியர்களும்**

மருதம் ஓரம்போகி; நெய்தல்அம் மூவன்
*கருதும் குறிஞ்சி கபிலன்; கருதிய*
பாலை ஓதலாந்தை; பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு.

3. கலித்தொகையும் அதன் ஆசிரியர்களும்

அ. பெருங்கடுங்கோன் பாலை; கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்; அருஞ்சோழன்
நல்லுருத்திரன் முல்லை; நல்லந்துவன் நெய்தல்
கல்விவலார் கண்ட கலி.

ஆ. போக்கெல்லாம் பாலை; புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கமளி யூடல் அணிமருதம்—நோக்கொன்றி
இல்லிருத்தல் முல்லை இரங்கியபோக் கோர்நெய்தல்
புல்லுங் கலிமுறை கோப்பு.

4. பரிபாடலின் பாட்டுடைத் தலைவர்

திருமாற்கு இருநான்கு; செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டு காடுகாட்கு ஒன்று மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்ய பரிபாடல் திறம்.

ஆராய்ச்சிக் குறிப்பு

I (1) *இப் பாகுபாடு அகநானூற்றின் தனிச்சிறப்பு.*

(2) *பகுப்புத் தலைப்புகள் மூன்றும் தொகுப்புணர்ச்சியைத் துலக்குகின்றன.*

(3) *பாண்டி நாட்டுப் புலவரும் புரவலரும் முறையே தொகுத்ததும் தொகுப்பித்ததுமாகிய இக் நூலின் பகுப்புத் தலைப்புகளுள் மணியும் பவளமும் முத்தும் ஒளிரல் காணத்தக்கது.*

II (1) *இவ்வகைப் பாகுபாடும் இக் நூலின் தனிச்சிறப்பு.*

(2) *இக் கணக்கு முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றினும் குறிஞ்சி இருமடங்குப் பாடல்கள் பெற்றிருப்பதையும் பாலை 5 மடங்குப் பாடல்கள் பெற்றிருப்பதையும் காட்டும்.*

(3) *இன்னுமொரு வகையில் பார்த்தால் அகநானூற்றின் செம்பாதி பாலையாய் இருக்கும் சிறப்புத்தெரியும்.*

(4) *பிரிதலும் கூடலும் முறையே மிகமிகப் பெரிதாகவும் போற்றப்பட்ட திறம் உள்ளுதற்குரியது.*

(5) *அகநானூற்றில் ஊடலும் ஆற்றியிருத்தலும் இரங்கலும் (வாழ்வின் சிறுபான்மையன அல்லது சிறுபான்மையனவாய் இருக்கத் தக்கன என்பதனை உணர்த்தவோ?) நாற்பது நாற்பது பாடல்களும் கூடுதலாகிய குறிஞ்சி எண்பது பாடல்களும் பிரிதலாகிய பாலை இருநூறு பாடல்களும் பெற்றிருக்கும் அருமை பெருமைகள் ஆராயத்தக்கன.*

III *கலித்தொகையில் பாலை 36; குறிஞ்சி 29; மருதம் 35; முல்லை 17; நெய்தல் 33.*

# II

## I. சங்கப் புலவர் அகரவரிசை

இந்த அகரவரிசை, பாரிநிலைய வெளியீடாகிய சங்க இலக்கியப் பதிப்பையே (சமாஜப் பதிப்பு) அடிப்படையாகக் கொண்டது. இதனுடன் ஒப்புநோக்கு வகையால், 'மர்ரே' பதிப்பாகிய பாட்டும் தொகையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப் பதிப்பில், 'ஆன்', 'ஆர்' என்னும் ஒருமைப் பன்மை விகுதிகளால் வேறுபடுத்திக் காட்டப்பெறும் புலவர் பெயர்கள் உடுக்குறியிட்டுப் புலப்படுத்தப்பட்டுள்ளன.

அ

1. அகம்பன் மாலாதனார்
2. அஞ்சியத்தைமகள் நாகையார்
3. அஞ்சில் அஞ்சியார்
4. *அஞ்சில் ஆந்தையார்
5. அடைநெடுங்கல்வியார்
6. அணிலாடு முன்றிலார்
7. *அண்டர்மகன் குறுவழுதியார்
8. அதியன் விண்ணத்தனார்
9. அந்தி இளங்கீரனார்
10. *அம்மூவனார்
11. அம்மெய்யன்நாகனார்
12. அரிசில்கிழார்
13. அல்லங்கீரனார்
14. அழிசி நச்சாத்தனார்
15. *அள்ளூர் நன்முல்லையார்
16. அறிவுடை நம்பி

ஆ

17. ஆசிரியன் பெருங்கண்ணன்
18. ஆடுதுறை மாசாத்தனார்
19. ஆதிமந்தி
20. ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன்
21. ஆர்க்காடுகிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்
22. ஆலங்குடி வங்கனார்
23. ஆலத்தூர் கிழார்
24. ஆலம்பேரி சாத்தனார்
25. ஆவியார்
26. ஆவூர்கிழார்
27. ஆவூர்கிழார்மகனார் கண்ணனார்
28. ஆவூர்க்காவிதிகள் சாதேவனார்
29. ஆவூர் மூலங்கிழார்

இ

30. இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்
31. *இடைக்காடனார்
32. இடைக்குன்றூர்கிழார்
33. இடையன்சேந்தன் கொற்றனார்
34. இடையன் நெடுங்கீரனார்
35. இம்மென்கீரனார்
36. இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்
37. இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்
38. இருந்தையூர்க்கொற்றன் புலவன்
39. இரும்பிடர்த் தலையார்
40. இளங்கீரந்தையார்
41. *இளங்கீரனார்
42. இளநாகனார்
43. இளந்திரையன்
44. இளந்தேவனார்
45. இளம்புல்லூர்க் காவிதி
46. இளம்பூதனார்
47. இளம்பெருவழுதி
48. இளம்போதியார்
49. இளவெயினனார்
50. இறங்குகுடிக் குன்றநாடன்
51. இறையனார்
52. இனிசந்த நாகனார்

ஈ

53. *ஈழத்துப் பூதன்தேவனார்

உ

54. உகாய்க்குடிகிழார்
55. உக்கிரப்பெருவழுதி
56. உமட்டூர்கிழார்மகனார் பரங்கொற்றனார்

57. உம்பற்காட்டு இளங்கண்ணனார்
58. உருத்திரனார்
59. *உலோச்சனார்
60. உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார்
61. உழுந்தினைம்புலவர்
62. *உறையனார்
63. உறையூர் இளம்பொன்வாணிகனார்
64. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
65. உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்
66. *உறையூர்ச் சல்லியங்குமரனார்
67. *உறையூர்ச் சிறுகந்தனார்
68. உறையூர்ப் பல்காயனார்
69. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
70. *உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

ஊ

71. ஊட்டியார்
72. ஊண்பித்தை
73. ஊண்பொதி பசுங்குடையார்

எ

74. எயிற்றியனார்
75. எயினந்தையார்
76. எருமை வெளியனார்
77. எருமை வெளியனார் மகனார் கடலனார்
78. எழூஉப்பன்றி நாகன்குமரனார்

ஐ

79. ஐயாதிச் சிறுவெண்டேரையார்
80. *ஐயூர் முடவனார்
81. ஐயூர் மூலங்கிழார்

ஒ

82. ஒக்கூர் மாசாத்தனார்
83. *ஒக்கூர் மாசாத்தியார்
84. *ஒருசிறைப் பெரியனார்
85. ஒரூஉத்தனார்
86. ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்

ஓ

87. ஓதஞானி
88. ஓதலாந்தையார்
89. ஓரம்போகியார்
90. ஓரிற் பிச்சையார்
91. *ஓரேருழவர்

ஔ

92. ஔவையார்

க

93. கங்குல் வெள்ளத்தார்
94. கச்சிப்பேட்டு இளந்தச்சனார்
95. *கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றனார்
96. கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்
97. கடம்பனூர்ச் சாண்டிலியன்
98. கடலூர்ப் பல்கண்ணனார்
99. கடியலூர் உருத்திரங்கண்ணனார்
100. கடுந்தொடைக் காவினார்
101. கடுந்தோட் கரவீரன்
102. கடுவன் இளமள்ளனார்
103. கடுவன் இளவெயினனார்
104. கடுவன் மள்ளனார்
105. கணக்காயன் தத்தனார்
106. கணியன் பூங்குன்றனார்
107. கண்ணகனார்
108. கண்ணகாரன் கொற்றனார்
109. கண்ணங்கொற்றனார்
110. கண்ணம் புல்லனார்
111. கண்ணனார்
112. கதக்கண்ணனார்
113. கதப்பிள்ளையார்
114. கந்தரத்தனார்
115. கபிலர்
116. கயத்தூர்கிழார்
117. *கயமனார்
118 கருங்குழலாதனார்
119. கரும்பிள்ளைப் பூதனார்
120. கருவூர் கிழார்
121. கருவூர்க் கண்ணம்பாளனார்
122. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்
123. கருவூர்க் கலிங்கத்தார்
124. கருவூர்க் கோசனார்
125. கருவூர்ச் சேரமான் சாத்தன்
126. கருவூர் நன்மார்பனார்
127. கருவூர்ப் பவுத்திரனார்
128. கருவூர்ப் பூதஞ்சாத்தனார்
129. கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார்
130. கல்பொரு சிறுநுரையார்
131. கல்லாடனார்
132. கவைமகன்
133. கழாத்தலையார்
134. *கழார்க்கீரனெயிற்றியனார்
135. கழார்க்கீரனெயிற்றியார்
136. கழைதின்யானையார்
137. கள்ளிக்குடிப் பூதம்புல்லனார்
138. *கள்ளில் ஆத்திரையனார்

கா

139. காக்கைபாடினியார் நச்செள்ளையார்
140. *காசிபன்கீரன்

141. காட்டூர்கிழார்மகனார் கண்ணனார்
142. காப்பியஞ்சேந்தனார்
143. காப்பியாற்றுக் காப்பியனார்
144. காமஞ்சேர்குளத்தார்
145. காரிகிழார்
146. காலெறிகடிகையார்
147. காவட்டனார்
148. காவற்பெண்டு
149. காவன்முல்லைப் பூதனார்
150. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
151. *காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
152. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
153. காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்
154. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்

### கி

155. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்
156. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்
157. கிடங்கில் குலபதி நக்கண்ணனார்
158. கிள்ளிமங்கலங்கிழார்
159. கிள்ளிமங்கலங்கிழார் மகனார் சேரகோவனார்

### கீ

160. கீரங்கீரனார்
161. கீரந்தையார்

### கு

162. குடபுலவியனார்
163. *குடவாயிற்கீரத்தனார்
164. குட்டுவன் கண்ணனார்
165. குட்டுவன் கீரனார்
166. *குண்டுகட் பாலியாதனார்
167. குதிரைத்தறியனார்
168. குப்பைக்கோழியார்
169. குமட்டூர்க் கண்ணனார்
170. குமுழிஞாழலார் நப்பசலையார்
171. குழற்றத்தனார்
172. குளம்பனார்
173. குளம்பாதாயனார்
174. குறமகள் இளவெயினி
175. குறமகள் குறியெயினி
176. குறியிறையார்
177. *குறுங்கீரனார்
178. *குறுங்குடி மருதனார்
179. குறுங்கோழியூர்கிழார்
180. குன்றம் பூதனார்
181. *குன்றியனார்
182. குன்றூர் கிழார் மகனார்

### கூ

183. கூகைக்கோழியார்
184. கூடலூர் கிழார்
185. கூடலூர்ப் பல்கண்ணனார்
186. கூவன் மைந்தன்
187. கூற்றங்குமரனார்

### கே

188. கேசவனார்

### கொ

189. கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்
190. கொட்டம்பலவனார்
191. கொல்லன் அழிசி
192. கொல்லிக் கண்ணன்
193. கொள்ளம்பக்கனார்
194. கொற்றங் கொற்றனார்

### கோ

195. *கோக்குள முற்றனார்
196. கோடைபாடிய பெரும்பூதனார்
197. கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்
198. கோட்டியூர் நல்லந்தையார்
199. கோண்மா நெடுங்கோட்டனார்
200. கோப்பெருஞ் சோழன்
201. *கோவர்த்தனார்
202. கோவூர் கிழார்
203. கோவேங்கைப் பெருங்கதவனார்
204. கோழிக் கொற்றனார்
205. கோளியூர்கிழார் மகனார் செழியனார்
206. *கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்

### ச

207. சங்கவருணர் என்னும் நாகரியர்
208. சத்திநாதனார்
209. சல்லியங் குமரனார்

### சா

210. சாகலாசனார்
211. சாத்தந்தையார்
212. *சாத்தனார்

### சி

213. சிறுமோலிகனார்
214. சிறுவெண்டேரையார்
215. சிறைக்குடி ஆந்தையார்

### சீ

216. *சீத்தலைச் சாத்தனார்

செ

217. செங்கண்ணனார்
218. செம்பியனார்
219. செம்புலப் பெயனீரார்
220. செயலூர் இளம்பொன்சாத்தன் கொற்றனார்
221. செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன்
222. செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார்
223. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்

சே

224. சேந்தங்கண்ணனார்
225. *சேந்தம்பூதனார்
226. சேந்தங்கீரனார்
227. சேரமானெந்தை
228. சேரமான் இளங்குட்டுவன்
229. சேரமான் கணைக்காலிரும்பொறை
230. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை

சோ

231. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
232. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்
233. சோழன் நலங்கிள்ளி
234. சோழன் நல்லுருத்திரன்

த

235. தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்
236. தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்
237. தனிமகனார்

தா

238. தாமப்பல் கண்ணனார்
239. தாமோதரனார்
240. *தாயங்கண்ணனார்
241. தாயங்கண்ணியார்

தி

242. திப்புத்தோளார்
243. திருத்தாமனார்

தீ

244. தீன்மதி நாகனார்

து

245. *தும்பிசேர் கீரனார்
246. துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனார்
247. துறையூர் ஓடைகிழார்

தூ

248. *தூங்கலோரியார்

தே

249. தேய்புரிப்பழங்கயிற்றினார்
250. தேரதரன்
251. தேவகுலத்தார்
252. தேவனார்

தொ

253. தொடித்தலை விழுத்தண்டினார்
254. தொண்டி ஆமூர்ச்சாத்தனார்
255. *தொல்கபிலர்

ந

256. நக்கண்ணையார்
257. *நக்கீரர்
258. நப்பசலையார்
259. நப்பண்ணனார்
260. நப்பாலத்தனார்
261. *நம்பிகுட்டுவன்
262. நரிவெரூஉத்தலையார்
263. நரைமுடி நெட்டையார்
264. நல்லச்சுதனார்
265. நல்லந்துவனார்
266. நல்லழிசியார்
267. நல்லாவூர் கிழார்
268. நல்விறையனார்
269. நல்லுருத்திரனார்
270. நல்லூர்ச் சிறுமேதாவியார்
271. நல்லெழுநியார்
272. நல்வழுதியார்
273. நல்விளக்கனார்
274. நல்வெள்ளியார்
275. நல்வேட்டனார்
276. நற்சேந்தனார்
277. நற்றங்கொற்றனார்
278. நற்றமனார்
279. நன்பலூர்ச் சிறுமேதாவியார்
280. நன்னாகனார்
281. நன்னாகையார்

நா

282. நாகம்போத்தன்
283. நாமலார் மகன் இளங்கண்ணன்

நி

284. நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்

நெ

285. நெடுங்கழுத்துப் பரணர்
286. *நெடும்பல்லியத்தனார்
287. நெடும்பல்லியத்தை

288. நெடுவெண்ணிலவினார்
289. நெட்டிமையார்
290. *நெய்தற்கார்க்கியார்
291. நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்
292. நெய்தற்றத்தனார்

நொ

293. நொச்சி நியமங்கிழார்

நோ

294. நோய்பாடியார்

ப

295. பக்குடுக்கை நன்கணியார்
296. *படுமரத்து மோசிகீரனார்
297. படுமரத்து மோசிகொற்றனார்
298. பதடிவைகலார்
299. பதுமனார்
300. பரணர்
301. பராயனார்
302. பரூஉமோவாய்ப் பதுமனார்
303. பறநாட்டுப் பெருங்கொற்றனார்
314. பனம்பாரனார்

பா

305. பாண்டரங் கண்ணனார்
306. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
307. *பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்
308. பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்
309. பாண்டியன் பன்னாடுதந்தான்
310. பாண்டியன் மாறன்வழுதி
311. பாரதம் பாடிய பெருந்தேவனார்
312. பாரிமகளிர்
313. பார்காப்பான்
314. பாலைக்கௌதமனார்
315. பாலைபாடிய பெருங்கடுங்கோ
316. பாவைக்கொட்டிலார்

பி

317. பிசிராந்தையார்
318. பிரமசாரி
319. பிரமனார்
320. பிரான் சாத்தனார்

பு

321. புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழார்
322. புல்லாற்றூர் எயிற்றியனார்

பூ

323. பூங்கணுத்திரையார்
324. பூங்கண்ணன்
325. பூதங்கண்ணனார்
326. பூதபாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு
327. பூதம்புல்லனார்
328. பூதனார்
329. *பூதன்தேவனார்

பெ

330. *பெருங்கண்ணனார்
331. பெருங்குன்றூர் கிழார்
332. பெருங்கௌசிகனார்
333. பெருஞ்சாத்தனார்
334. பெருஞ்சித்திரனார்
385. பெருந்தலைச்சாத்தனார்
336. பெருந்தேவனார்
337. பெருந்தோட் குறுஞ்சாத்தன்
338. பெரும்பதுமனார்
339. பெரும்பாக்கன்
340. பெருவழுதி

பே

341. *பேயனார்
342. பேய்மகள் இளவெயினி
343. பேராலவாயர்
344. *பேரிசாத்தனார்
345. பேரெயின் முறுவலார்

பொ

346. பொதுக்கயத்துக்கீரந்தை
347. பொதும்பில் கிழார்
348. பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார்
349. பொதும்பிற் புல்லாளங் கண்ணியார்
350. பொத்தியார்
351. பொய்கையார்
352. பொருந்தில் இளங்கீரனார்
353. பொன்மணியார்
354. பொன்முடியார்
355. பொன்னாகன்

போ

356. போதனார்
357. போந்தைப் பசலையார்

ம

358. *மடல்பாடிய மாதங்கீரனார்
359. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்
360. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
361. மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனார்
362. மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்
363. மதுரை இளங்கௌசிகனார்
364. *மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்

365. மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தா
ராயத்தனார்
366. மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்
367. மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார்
368. மதுரைக் கணக்காயனார்
369. மதுரைக் கண்டரதத்தனார்
370. மதுரைக் கண்ணத்தனார்
371. மதுரைக் கவுணியன் பூதத்தனார்
372. மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்
373. மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்
374. மதுரைக் காருலவியங் கூத்தனார்
375. மதுரைக் கூத்தனார்
376. மதுரைக் கொல்லன் புல்லன்
377. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்
378. மதுரைச் சுள்ளம்போதனார்
379. மதுரைத் தத்தங்கண்ணனார்
380. மதுரைத் தமிழ்க் கூத்தனார் நாகன் தேவனார்
381. *மதுரைத் தமிழக் கூத்தனார்
382. மதுரைப் படைமங்க மன்னியார்
383. மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார்
384. மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்
385. மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்
386. மதுரைப் புல்லங்கண்ணனார்
387. மதுரைப் பூதனிள நாகனார்
3ϵ8. மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார்
389. மதுரைப் பெருங்கொல்லன்
390. மதுரைப் பெருமருதனார்
391. மதுரைப்பெருமருதிளநாகனார்
392. மதுரைப் போத்தனார்
393. மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்
394. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்
கண்ணனார்
395. மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்
396. மதுரை வேளாசான்
397. மருங்கூர்கிழார் பெருங்கண்ணனார்
398. மருங்கூர்ப்பட்டினத்துச் சேந்தன் குமரனார்
399. மருங்கூர்ப்பாகை சாத்தன் பூதனார்
400. மருதம்பாடிய இளங்கடுங்கோ
401. *மருதனிளநாகனார்
402. மலையனார்
403. மள்ளனார்

மா

404. மாங்குடி மருதனார்
405. மாடலூர் கிழார்
406. மாதீர்த்தன்
407. மாமிலாடன்
408. மாமூலனார்
409. மாயேண்டன்
410. மார்க்கண்டேயனார்
411. மாலைமாறன்
412. மாவளத்தன்
413. மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்
414. மாறோக்கத்து நப்பசலையார்
415. மாற்பித்தியார்

மி

416. மிளைக்கந்தன்
417. மிளைப்பெருங்கந்தன்
418. மிளைவேள் தித்தன்

மீ

419. மீனெறி தூண்டிலார்

மு

420. முக்கல் ஆசான் நல் வெள்ளையார்
421. முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்
422. முடத்தாமக்கண்ணியார்
423. *முடத்திருமாறன்
424. *முதுகூத்தனார்
425. முதுவெங்கண்ணனார்
426. முப்பேர் நாகனார்
427. முரஞ்சியூர் முடிநாகராயர்
428. முள்ளியூர்ப் பூதியார்

மூ

429. மூலங்கீரனார்

மை

430. மையோடக்கோவனார்

மோ

431. மோசிகண்ணத்தனார்
432. *மோசிகீரனார்
433. மோசிகொற்றன்
434. மோசிக்கரையனார்
435. மோசிசாத்தனார்
436. மோதாசனார்

வ

437. வடநெடுந்தத்தனார்
438. *வடமவண்ணக்கன் தாமோதரன்
439. வடமோதங்கிழார்
440. வண்ணக்கன் சோருமருங்குமரனார்
441. வண்ணப்புறக்கந்தரத்தனார்.

442. வருமுலையாரித்தி
443. வன்பரணர்

வா

444. வாடாப்பிரமந்தன்
445. வாயிலான் தேவன்
446. வாயிலிளங்கண்ணன்
447. வான்மீகியார்

வி

448. விட்டகுதிரையார்
449. விரிச்சியூர் நன்னாகனார்
450. விரியூர் நக்கனார்
451. வில்லக விரலினார்
452. விழிக்கட் பேதை பெருங்கண்ணனார்
453. விற்றூற்று மூதெயினனார்
454. விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்
455. வினைத்தொழில் சோகீரனார்

வீ

456. வீரை வெளியனார்
457. வீரை வெளியன் தித்தனார்

வெ

458. வெண்கண்ணனார்
459. வெண்கொற்றன்
460. வெண்ணிக் குயத்தியார்
461. வெண்பூதன்
462. *வெண்பூதியார்
463. வெண்மணிப்பூதி
464. வெள்ளாடியனார்
465. வெள்ளியந் தின்னனார்
466. வெள்ளி வீதியார்
467. வெள்ளெருக்கிலையார்
468. வெள்ளைக்குடி நாகனார்
469. வெள்ளைமாளர்
470. வெறிபாடிய காமக்கண்ணியார்

வே

471. வேட்டகண்ணன்
472. வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்
473. வேம்பற்றூர்க் குமரனார்

குறிப்பு: உடுக்குறி பெற்ற புலவர்கள் எண்ணிக்கை 56.

இந்த ஐம்பத்தறுவரும் அன் ஆர் என்னும் ஒருமைப் பன்மை விகுதி வேறுபாடு உடைய புலவர்கள் ஏனையோர் நானூற்றுப் பதினெழுவர். (473—56=417).

# 2. சங்கப்புலவர் பெயர்வேறுபாட்டு விளக்கம்

[இப்பிரிவில் ஒருமைப்பன்மை வேறுபாடு நீங்க, ஏனைய வேறுபாடுடைய புலவர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.]

1. அண்டர் மகன் குறுவழுதியார்
   (குறுவழுதி)
2. அறிவுடை நம்பி
   (பாண்டியன் அறிவுடை நம்பி)
3. ஆலம்பேரி சாத்தனார்
   (மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்)
4. ஆவூர்க்காவிதிகள் சாதேவனார்
   (ஆமூர்க் கவுதமன் சாதேவனார்)
5. இளங்கீரனார்
   (எயினந்தை மகன் இளங்கீரனார்)
6. இளந்திரையன்
   (தொண்டைமான் இளந்திரையன்)
7. இளந்தேவனார்
   (மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார்)
8. இளம்பெருவழுதி
   (கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி)
9. ஈழத்துப் பூதன் தேவனார்
   (மதுரை ஈழத்துப் பூதன் தேவன்)
10. உக்கிரப் பெருவழுதி
    (பாண்டியன் உக்கிரப் பெருவழுதி)
11. ஐயூர் முடவனார்
    (ஐயூர் கிழார்)
12. ஓதஞானி
    (கருவூர் ஓதஞானி)
13. கடுவன் மள்ளனார்
    (மதுரைத் தமிழக் கூத்தனார் கடுவன் மள்ளனார்)
14. கணியன் பூங்குன்றனார்
    (கணிபுன் குன்றனார்)
15. கண்ணம்புல்லனார்
    (கருவூர்க் கண்ணம் புல்லனார்)
16. கண்ணனார்
    (மதுரைக் கண்ணனார்)
17. கதக்கண்ணனார்
    (மதுரைக் கதக்கண்ணன்)
18. கதப்பிள்ளையார்
    (கருவூர்க் கதப்பிள்ளை)
19. கந்தரத்தனார்
    (உரோடகத்துக் கந்தரத்தனார்,
    ஒரோடகதது்க் கந்தரத்தனார்)
20. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்
    (கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார்)
21. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
    (காரிக்கண்ணனார்)
22. காவன்முல்லைப்பூதனார்
    (காவன்முல்லைப் பூதரத்தனார்)
23. குடவாயிற் கீரத்தனார்
    (கீரத்தனார்,
    குடவாயிற் கீரனக்கன்)
24. குன்றூர் கிழார் மகனார்
    (குன்றூர் கிழார் மகன் கண்ணத்தனார்)
25. கொற்றங் கொற்றனார்
    (மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்)
26. கோவர்த்தனார்
    (கோவதத்தர்)
27. கோவேங்கைப் பெருங்கதவனார்
    (கோவேங்கைப் பெருங்கதழ்வர்)
28. சீத்தலைச் சாத்தனார்
    (மதுரைச் சீத்தலைச் சாத்தன்,
    மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்)
29. செங்கண்ணனார்
    (மதுரைச் செங்கண்ணனார்)
30. செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார்
    (செல்லூர்க் கொற்றன்)
31. சேந்தம் பூதனார்
    (சேகம் பூதனார்,
    மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார்)
32. தாயங்கண்ணனார்
    (எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்)

33. தும்பிசேர் கீரனார்
(தும்பி சொகினனார்,
மதுரை வேளாதத்தன்)

34. நக்கண்ணையார்
(பெருங்கோழி நாய்கன் மகள்
நக்கண்ணையார்)

35. நக்கீரர்
(மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன்,
மதுரை நக்கீரர்)

36. நப்பாலத்தனார்
(பாலத்தனார்)

37. நல்லந்துவனார்
(மதுரை ஆசிரியர் நல்லந்துவனார்)

38. நல்வெள்ளியார்
(மதுரை நல்வெள்ளி)

39. நல்வேட்டனார்
(மிளைகிழான் நல்வேட்டன்)

40. நன்னாகனார்
(புறத்திணை நன்னாகனார்)

41. நன்னாகையார்
(கச்சிப்பேட்டு நன்னாகையார்)

42. நெய்தல் தத்தனார்
(கொடியூர் கிழார் மகனார் நெய்தல்
தத்தனார்)

43. பெருஞ்சாத்தனார்
(வடமவண்ணக்கண் பெருஞ்சாத்தனார்

44. பெருந்தலைச்சாத்தனார்
(ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச்
சாத்தனார்)

45. பெருந்தேவனார்
(கடுகு பெருந்தேவன்)

46. பெரும்பதுமனார்
(மீளிப் பெரும்பதுமனார்)

47. பேயனார்
(பேயார்)

48. பேரலாவாயர்
(மதுரைப் பேராலவாயர்)

49. பேரிசாத்தனார்
(வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்)

50. பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார்
(பொதும்பில் கிழார் மகனார்)

51. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்
(மதுரை அளக்கர் ஞாழார் மகனார்
அம்மள்ளனார்,
அம்மள்ளனார்)

52. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
(இளவேட்டனார்)

53. மதுரைக் கணக்காயனார்
(கணக்காயனார்)

54. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்
(மதுரைப் பொன்செய் கொல்லன்
வெண்ணாகனார்)

55. மருதன் இளநாகனார்
(மதுரை மருதனிளநாகனார்)

56. மாங்குடி மருதனார்
(மாங்குடி கிழார்,
மதுரைக் காஞ்சிப்புலவர்,
காஞ்சிப்புலவனார்)

57. முது கூத்தனார்
(முது கூற்றனார்,
உறையூர் முது கூற்றன்,
உறையூர் முது கூத்தனார்,
உறையூர் முது கொற்றன்)

58. வெண்கண்ணனார்
(பொதும்பில் கிழான் வெண்கண்ணனார்)

59. வெண்பூதி
(வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்)

1. சங்கப்புலவர் பெயர் வேறுபாட்டு விளக்கத்தில் 59 புலவர்களின் பெயர்கள் உள்ளன.
2. இந்த 59 புலவர்களில் 71 பெயர் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**ஆராய்ச்சிக் குறிப்பு :—**

1. இவ்வேறுபாடுகள் பெரும்பாலும் ஊராலேயே அமைந்துள்ளன.
2. அரசர்களின் பெயர்கள் வேறுபட்டமை அவரவர் குடிப்பெயரால்; அவர் மாய்ந்த இடத்தால்.
3. மாங்குடி மருதனார் அவர் பாடிய பாட்டால் மதுரைக்காஞ்சிப் புலவர் என வேறுபட்டமை கருதத்தக்கது.
4. நன்னாகனார், திணையால் வேறுபடுத்தப்பட்டுப் புறத்திணை நன்னாகனார் எனப்படுகிறார். அதற்கேற்றாற் போல இவர் புறநானூற்றில் 5 பாக்கள் மட்டுமே பாடியுள்ளார்.
5. 'அன், ஆர்' என்னும் ஒருமைப்பன்மை விகுதிகளால் வேறுபடுத்தப்பெற்ற புலவர்கள் எண்ணிக்கை 56. வேறுவகையான் வேறுபடுத்தப்பெற்ற புலவர்கள் எண்ணிக்கை 59. எனவே 115 புலவர்கள் வேறுபட்ட பெயருடையவர்கள். பெயர் வேறுபாடு இல்லா ஏனையோர் 358 புலவர்கள் ஆவர்.

# III

## புலவர் பெயர் வகை

[புலவர் பெயர் வகைப் பிரிவுகள் பல உடுக்குறி பெற்றுள்ளன. சிலவே உடுக்குறி பெருமல் உள. உடுக்குறி பெருத அச் சில, பாரிநிலைய வெளியீடாகிய சங்க இலக்கியம் (சமாஜப் பதிப்பு) என்னும் நூலின்கண் அறிஞர் பல்லோரால் உருவாக்கப்பெற்றவை. உடுக்குறி அமைக்கப்பெற்ற பல, இந் நூலுக்கு என்றே உருவாக்கப்பெற்றவை.]

### 1. உறுப்பால் பெயர் பெற்றவர் (33)

1. ஆசிரியன் பெருங்கண்ணன்
2. ஆர்க்காடு கிழார் மகனுர் வெள்ளைக் கண்ணத்தனுர்
3. இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனுர்
4. இரும்பிடர்த்தலையார்
5. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
6. உறையூர்க் கதுவாய்ச் சாத்தனுர்
7. ஐயூர் முடவனுர்
8. கடுந்தோட் கரவீரன்
9. கருங்குழலாதனுர்
10. கருவூர் நன்மார்பனுர்
11. கழாத்தலையார்
12 காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர்
13. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனுர்
14. குண்டுகட் பாலியாதனுர்
15. சீத்தலைச்சாத்தனுர்
16. செங்கண்ணனுர்
17. சேரமான் கணைக்கால் இரும்பொறை
18 தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனுர்
19. தாமப்பல் கண்ணனுர்
20. திப்புத்தோளார்
21. நரிவெரூஉத்தலையார்
22. நரைமுடி நெட்டையார்
23. நெடுங்கழுத்துப் பரணர்
24. நெட்டிமையார்
25. பரூஉமோவாய்ப் பதுமனுர்
26. பூங்கண்ணன்
27. பெருந்தலைச் சாத்தனுர்
28. பெருந்தோட் குறுஞ்சாத்தன்
29. பேரெயின் முறுவலார்
30. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்
31. முடத்தாமக் கண்ணியார்
32. முடத்திருமாறன்
33. வருமுலையாரித்தி

*** தலை (5)**

1. இரும்பிடர்த் தலையார்
2. கழாத் தலையார்
3. சீத்தலைச் சாத்தனுர்
4. நரிவெரூஉத் தலையார்
5. பெருந்தலைச் சாத்தனுர்

*** கண் (11)**

1. ஆசிரியன் பெருங்கண்ணன்
2. ஆர்க்காடு கிழார் மகனுர் வெள்ளைக் கண்ணத்தனுர்
3. இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனுர்
4. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர்
5. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனுர்
6. குண்டுகட் பாலியாதனுர்
7. செங்கண்ணனுர்
8. தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனுர்
9. தாமப்பல் கண்ணனுர்
10. பூங்கண்ணன்
11. முடத்தாமக் கண்ணியார்

*** இமை (1)**

நெட்டிமையார்

*** கதுவாய் (1)**

உறையூர்க் கதுவாய்ச் சாத்தனுர்

*** பல் (1)**

தாமப்பல் கண்ணனுர்
ஒப்பு நோக்குக : 'பேரெயின் முறுவலார்'

*** மோவாய் (1)**

பரூஉ மோவாய்ப் பதுமனுர்

* கழுத்து (1)

நெடுங்கழுத்துப் பரணர்

* தோள் (3)

1. கருந்தோட் கரவீரன்
2. திப்புத்தோளார்
3. பெருந்தோட் குறுஞ்சாத்தன்

* மார்பு (2)

1. கருவூர் நன்மார்பனார்
2. வருமுலையாரித்தி

* கால் (1)

சேரமான் கணைக்கால் இரும்பொறை

* முடம் (5)

1. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
2. ஐயூர் முடவனார்
3. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்
4. முடத்தாமக் கண்ணியார்
5. முடத்திருமாறன்

* ஊரானும் உறுப்பானும் பெயர் பெற்றோர் (6)

1. ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்
2. ஐயூர் முடவனார்
3. கருவூர் நன்மார்பனார்
4. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்
5. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
6. தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்

**ஆராய்ச்சிக் குறிப்பு :**

உறுப்புவகை—11. செங்கண் என்பது உறுப்பாற்பெயர் பெற்ற புலவர்களின் பெயரடைவில் நான்கு முறை பயிலுகிறது.

வெள்ளைக்கண், பூங்கண், காரிக்கண், குண்டுகண்—இவை ஒவ்வொரு முறை பயிலுகின்றன. உறுப்புகளுள் தலையும் கண்ணும் இமையும் கதுவாயும் பல்லும் மோவாயும் கழுத்தும் தோளும் மார்பும் காலும் பயின்றவாறு உணர்க.

## 2. ஊரால் பெயர்பெற்றவர் *(49)*

1. அரிசில் கிழார்
2. ஆலியார்
3. ஆலத்தூர் கிழார்
4. ஆவூர் கிழார்
5. இடைக் காடனார்
6. இடைக் குன்றூர் கிழார்
7. இளம்புல்லூர்க் காவிதி
8. இறங்குகுடிக் குன்ற நாடன்
9. உகாய்க்குடி கிழார்
10. உறையூர் இளம்பொன் வாணிகனார்
11. ஐயூர் முடவனார்
12. ஐயூர் மூலங்கிழார்
13. கச்சிப்பேட்டு இளந்தச்சனார்
14. கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்
15. கடம்பனூர்ச் சாண்டிலியன்
16. கயத்தூர் கிழார்
17. கருவூர் கிழார்
18. கருவூர்க் கலிங்கத்தார்
19. கருவூர்க் கோசனார்
20. கல்லாடனார்
21. கள்ளில் ஆத்திரையனார்
22. காப்பியாற்றுக்காப்பியனார்
23. காரி கிழார்
24. கிள்ளிமங்கலங் கிழார்
25. குடபுலவியனார்
26. குளம்பனார்
27. குறுங்கோழியூர் கிழார்
28. குன்றூர் கிழார் மகனார்
29. கூடலூர் கிழார்
30. கோக்குளமுற்றனார்
31. கோவூர் கிழார்
32. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந் தும்பியார்
33. துறையூர் ஓடைகிழார்
34. நல்லாவூர் கிழார்
35. நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்
36. நொச்சி நியமங்கிழார்
